**சார்பு நீதிமன்றம், செஞ்சி**

**அ.வ.எண்.41/2021** **நாள்.10.06.2025**

2025-ம் ஆண்டு ஜீன் திங்கள் 10-ம் நாள் வாதி தரப்பு **1ம்** சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு உறுதிமொழி சட்டப்படி சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | குமார் (எ) செல்வக்குமார் | தொழில் | |
| த.பெ/க.பெ. | நடேசக்கவுண்டர் | சாதி | |
| கிராமம் | ஏதாநெமிலி | மதம் | இந்து |
| வட்டம் | | வயது | 57 |

**வா.சா.1**

**முதல் விசாரணை**

நான் இந்த வழக்கின் வாதி ஆவேன். நான் வா.**சா.1** ஆக இருந்து எனது தரப்பு எழுத்து மூலமான முதன்மை பிரமாண வாக்குமூலத்தினை தாக்கல் செய்கிறேன். அதில் கண்டுள்ள சங்கதிகள் என்னால் கூறப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு, நான் படித்துப்பார்த்து, படிக்க கேட்டு சரி என ஒப்புக்கொண்டு, கையொப்பம் செய்தேன் என ஒப்புக்கொள்கிறேன். எழுத்து மூலமான முதன்மை பிரமாண வாக்குமூலத்தை எனது தரப்பு வாய்மொழி சாட்சியமாக ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**ஆவணங்கள்**

1. வா.சா.ஆ.1 - 09.05.2019 தேதியிட்ட கிரைய பத்திரம் இணைய சான்றிட்ட நகல்
2.வா.சா.ஆ.2 - 24.06.2019 தேதியிட்ட மாரிசாமி பெயரிலான தானசெட்டில்மெண்ட் இணைய சான்றிட்ட நகல்
3. வா.சா.ஆ.3 - 05.10.2020 தேதியிட்ட மாரிசாமி பெயரிலான கிரைய பத்திரம் இணைய சான்றிட்ட நகல்
4. வா.சா.ஆ.4- 24.06.2019 தேதியிட்ட மஞ்சுளா பெயரிலான தானசெட்டில்மெண்ட் பத்திரம் இணைய சான்றிட்ட நகல்
5. வா.சா.ஆ.5- 05.10.2020 தேதியிட்ட கவிதா பெயரிலான கிரைய பத்திரம் இணைய சான்றிட்ட நகல்
6. வா.சா.ஆ.6- 15.02.2021 தேதியிட்ட வில்லங்க சான்று இணைய சான்றிட்ட நகல்

(வாதி தரப்பில் அசல் ஆவணங்கள் தாக்கல் செய்யப்படவில்லை என்ற ஆட்சேபணைக்குட்பட்டு மேற்கண்ட ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகிறது)

(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.)